# சங்க இலக்கியத்தில் கலைஞர்களும், இசைகளும்

**ரா.ஜெயஸ்ரீ,**
**தமிழ் உயாராய்வுத் துறை,**
**விவேகானந்தா கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரி (தன்னாட்சி),**
**எளையாம்பாளையம், திருச்செங்கோடு,**
**நாமக்கல் மாவட்டம் - 637205.**

**3**

**ஆய்வுச்சுருக்கம்**

இலக்கியம் ஒரு கலை. கலையென்றால் சொல்லுகிற அல்லது சொல்ல விரும்புகிற செய்திகளை அழகும் நேர்த்திபடச் சொல்வது என்பது **'தெய்வம், உணா, மா, மரம், புள், பறை, யாழ்'** ஆகிய பொருள்கள் சொல்லப்பட்டுள்ளன. இந்த ஏழும் தமிழர் பண்பாட்டுக் கருப்பொருள்கள். ஏழு கருப்பொருளில் ஒன்று யாழ், மற்றொன்று பறை. யாழ் மிக முதன்மையான ஓர் இசைக்கருவியாக இருந்தது. சங்கப் பாடல்களில் அறுபத்தொன்பது இடங்களில் குறிக்கப்பெறும் ஓர் இசைக்கருவி யாழ், யாழை இசைத்தவன் பாணன். பாணன், பாண்மகன், யாழ் மகன், பாடினி ஆகிய பெயர்கள் பாணரைக் குறிக்கும். கலை என்பது மன உணர்வின் வெளிப்பாடு. மனிதனது வெளிப்பாட்டுக்குத் தக்கனவாக நாவல், கதை, சிறுகதை, கட்டுரை, கவிதை என பல்வேறு வடிவங்களுக்குள் இலக்கியம் எனும் மொழிசார் கலையும் நுண்கலை, பயன்கலை, கவின்கலை, நிகழ்த்துகலைகள் என மொழிசாரா கலைகளும் தம் வடிவங்களில் வேறுபட்டிருப்பினும் தமது உள்ளடக்கங்களில் ஏதோ ஒரு புள்ளியைப் பற்றி குவிந்திருப்பது வெளிப்படையானது.

**திறவுச் சொற்கள்**: போலச் செய்தல் ,திணைச்சமூகம் , பாசறை , குன்றக்குறவன் , திங்கள்

**முன்னுரை**

மனத்துள் தோன்றும் கற்பனைகள் ஒரு கட்டமைப்பை உருவாக்குகின்றன. இக்கட்டமைப்பு கலையாக உருவெடுக்கிறது. கற்பனைக் கட்டமைப்பை எளிதாக இப்படிச் சொல்லலாம். நாற்காலி ஒன்றைக் கற்பனை செய்தால், அதுவெறும் நாற்காலியில் அமரும் நிலையை மட்டுமே குறிப்பதாகாது. தற்காலச் சூழலில் நாற்காலி என்றதும் பதவி என்னும் ஒரு கற்பனை விளைகிறது. எனவேதான், கலைஞர்களின் படைப்பில் உட்பொருள் உண்டு என்பதை உணரவேண்டும். போலச்செய்தல் என்னும் ஒரு பண்புதான் எல்லாக் கலைகளுக்கும் அடிப்படை. உடல் அசைவுகளால் நடனம் ஆக்கிச் செயல்படுத்தும்போது அது சடங்காகிறது. இவ்வாறு நிகழும், நிகழ்த்தும் மந்திரங்களும் சடங்குகளுமே பின்னாளில் கலையாக உருப்பெறுகின்றன. தொன்மங்கள் என்னும் கற்பனைகளிலிருந்து கலைகள் தோன்றியிருக்கின்றன. இதன்வழி சங்க இலக்கியத்தில் காணலாகும் கலைஞர்களின் திறனையும் இசைக் கலைகளையும் பற்றி ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**இலக்கியமும் கலைகளும்**

இலக்கியம் ஒரு கலை. கலையென்றால், சொல்லுகிற அல்லது சொல்ல விரும்புகிற செய்திகளை அழகும் நேர்த்திபடச் சொல்வது. காண்பார், கேட்பார் அல்லது படிப்பார் மனதில் சுவைபடவும்,

அவர்கள் மனம் கொள்ளுமாறும், அவர்கள் சிந்தையில் அல்லது உணர்வில் ஓரளவாவது அசைவையும் தாக்கத்தையும் ஏற்படுத்துமாறும் அமைவது.

**கவிதை**

கவிதை என்பது, அடிப்படையில் பாடல் என்றே அறியப்படுகிறது. சொற்களின் ஓசை ஒழுங்கு முறையோடு, இசை தழுவி அமைவது, பாடல் அல்லது கவிதையாகும்.

**இசையும் இலக்கியமும்**

கவிதை, **'இலக்கியக் கலையின் அரசி'** என்று அழைக்கப்படுகிறது. மேலும் அதுவே, இலக்கிய வகைகளுள் மூத்தது, மையமானது.

**இசை – இசைக்கலைஞர் - இசைக்கருவிகள்**

திணைச் சமூகம் பற்றிக் கூறும், தொல்காப்பியத்தில் இசை நூல்களைப் பற்றிய குறிப்புகள் உள்ளன.

**"அசையும் சீரும் இசையொடு சேர்த்தி**
**வகுத்தனர் உணர்த்தலும் வல்லோர் ஆறே" 1**
**"இசைப்பு இசையாகும் என்கிறது" 2**

இசைப்பு என்பது யாழ் போன்ற இசைக்கருவிகளை இசைத்தல் ஆகும் என்பது பொருள்.

**"அளபு இறந்து இசைத்தலும் ஒற்று இசை நீடலும்**
**உள என மொழிப இசையொடு சிவணிய**
**நரம்பின் மறைய என்மனார் புலவர்" 3**

இசையொடு பொருந்திய யாழ் நூலில் இசையிலே எழுத்து ஒலிகள் அளவு கடந்து ஒலித்தலும், ஒற்றுக்கள் நீண்டு ஒலித்தலும் உண்டு. இசையைத் தொழிலாக கொண்ட மக்கள் உபயோகப்படுத்தும் இசைக்கருவிக்குப் பறை என்றும், இன்பமாக பொழுதுபோக்கும் மக்கள் பயன்படுத்தும் இசைக்கருவி யாழ் என்றும் தொல்காப்பியத்தில் இருவகை இசைக்கருவிகளைப் பற்றிக் குறிப்பிடுகிறார் தொல்காப்பியர். தமிழர் வாழ்க்கை நெறியின் அடிப்படைப் பண்பாட்டுக் கருவூலங்களைக் குறிப்பிடுகிறது.

**"தெய்வ முணாவே மாமரம் புட்பறை**
**செய்தி யாழின் பகுதியொடு தொகைஇ**
**அவ்வகை பிறவும் கருவென மொழிப" 4**

இங்கு தெய்வம், உணா, மா, மரம், புள், பறை, யாழ் ஆகிய பொருள்கள் சொல்லப்பட்டுள்ளன. ஏழும் தமிழர் பண்பாட்டுக் கருப்பொருள்கள். ஏழு கருப்பொருளில் ஒன்று யாழ். மற்றொன்று பறை. யாழ் மிக முதன்மையான ஓர் இசைக்கருவியாக இருந்தது. சங்கப்பாடல்களில் 69 இடங்களில் குறிக்கப்பெறும் ஓர் இசைக்கருவி யாழ். யாழை இசைத்தவன் பாணன். பாணன், பாண்மகன், யாழ் மகன், பாடினி ஆகிய பெயர்கள் பாணரைக் குறிக்கும்.

**"பறையை இசைத்தவன் பறையன். துடி இசைத்தவன் துடியன். தண்ணுமைக்கருவி, உழவுச்சூழல், போர்ச்சூழல் ஆகிய சூழல்களில் இசைக்கப்பட்டது. பூக்கோள் நிலை என்பது**

**போர்ச்சூழலில் அமையும் ஒரு நிலை. பாசறையில், அரசனிடமிருந்து போர்க்குரிய பூவைப் பெறுகையில் புலையன் தண்ணுமை இசைக்கிறான்"**5 (புறம் - 289).

பாணனின் மனைவியாக விறலி பேசப்படுகிறாள். விறலி மற்றும் பாடினி இருவரும் ஆடல், பாடல், கருவி இசைத்தல் ஆகிய மூன்றிலும் வல்லவராக இருந்தனர். இருவரும் அரசரைப் பாடுதல் மரபாக இருந்தது. பாணர் சமூகத்தின் தலைவியாக விறலி கருதப்பட்டாள்.

**சீறூர் சமூகம் - கலைஞர்களும், இசைக்கருவிகளும்**

சீறூர் சமூகம் நில உடைமைச் சமூகம். சீறூர் சமூகத்தில் கலைஞர்கள் போற்றப்பட்டனர். இது குறுநில மன்னர்கள் கலைஞர்களைப் போற்றிய காலம். குறிப்பாகக் கடையெழு வள்ளல்களைச் சொல்லலாம். **'ஔவை, அதியமான், நெடுமான் அஞ்சி'** இறந்தபின் அவனைக் குறித்துப் பாடுகையில்,

**" சிறியகட் பெறினே யெமக்கீயு மன்னே**
**பெரியகட் பெறினே**
**யாம்பாடத்தான் மகிழ்ந்துண்ணு மன்னே" 6**

எனக் கூறுவதைக் காண்க. குன்றக்குறவன் பற்றி ஐங்குறுநூறு குறிப்பிடுகிறது. பாணர், பாடுநர், பரிசிலர் ஆகியோர் பற்றிச் செய்திகள் உள்ளன. இலக்கியத்தில், குருவிக் கூடுகளில் யாழ் நரம்பு காணப்பட்டது என்னும் குறிப்பு வருகின்றது. யாழ் போன்ற இசைக்கருவிகள் அளவில் மலிந்திருந்தன என்பதையும் இசைக்கலைஞர்களும் நிறைய இருந்தனர் என்பதையும் இந்தச் செய்யுள் வரிகள் உணர்த்துகின்றன. சமூகம், இசைக்குழுச் சமூகமாக இருந்தது எனலாம். சங்கச் சமுதாயத்தில் பெண்ணுக்கு முதலிடம் அளிக்கப்பட்டது. ஐங்குறுநூற்றுப் பாடல் ஒன்று,

**"குன்றக்குறவன் கடவுட் பேணி**
**யிரந்தனன் பெற்ற வெள்வளைக் குறுமகள்" 7**

என்று கூறுவதினின்று சங்ககாலம் பெண்ணைப் போற்றியதுணரலாம். சங்ககாலத்தில் பறையன், துடியன், பாணன், கடம்பன் என நான்கு குடிகள் மட்டுமே இருந்ததாக ஒரு பாடல் கூறுகிறது.

**ஆடல் கலை - கலைஞர்**

ஆடல்(ஆட்டம்) என்றும் கூத்து என்றும் நடனக்கலை குறிக்கப்பட்டது. பயிர் விளைவது போலவும், வேட்டை ஆடுவது போலவும் நடனம் ஆடினர். ஆடலுக்குத் தனியே அவையும், ஆடுகளமும் இருந்தன. அரசர்களும் ஆடியிருக்கின்றனர் என்னும் குறிப்பு உண்டு. பதிற்றுப்பத்து நூலின் ஆறாம் பத்து, ஆடுகோட்பாட்டுச் சேரலாதனைக் காக்கைப்பாடினியார் நச்செள்ளையார் பாடியதாகும். அதிலுள்ள 56 – ஆம் பாடல், அரசன் சேரலாதன், போர்க்களத்தில் முரசு ஒலிக்கப் பொன்னாற் செய்த உழிஞைப்பூவைச் சூடி ஆடுகின்றவன் எனக் கூறுகிறது.

**"வலம்படு முரசந்து வைப்ப .........................**
**.................. பொலங்கொடி யுழிஞையன்" 8**

ஆதிமந்தி – ஆட்டனத்தி ஆகியோரின் ஆட்டமும் நாம் அறிந்ததே. குரவை, துணங்கை ஆகிய ஆட்ட வகைகள் இருந்தன.

**குரவையாட்டம்**

குரவையாட்டம் என்றும் குரவைக்கூத்து என்றும் கூறப்படுகின்ற இந்த ஆட்டம் குழுவாக ஆடும் ஆட்ட வகையைச் சேர்ந்தது. குரவைக்கூத்தில் முதலில் பெண்களே ஆடுவர்; பின்னர் ஆண்களும் இணைந்து கொள்வர். குரவையாட்டத்தில் கள்ளுக்கு முதன்மை இடம் உண்டு. கள்ளை உணவாக உண்ணும் சமூகமாதலால், பெண்களும் கள்ளுண்டனர். பெண்கள் கள்ளுண்டு குரவையாட்டம் ஆடினர். மலை மக்களாகிய குறவர் கள்ளுண்டு, தம் பெண்டிரொடு சிறுபறை ஒலிக்கக் குரவையாடினர் என்று மலைபடுகடாம் கூறுகிறது.

**" நறவுநாள் செய்த குறவர்தம் பெண்டிரொடு**
**மான்தோல் சிறுபறை கறங்கக் கல்லென**
**வான்தோய் மீமிசை அயரும் குரவை" 9**

பொழுதுபோக்காகக் குரவையாட்டம் ஆடப்பெற்றது எனவும் அறிகிறோம்.

**"அரசன் பிறந்தநாளில் குரவையாட்டம் ஆடும் வழக்கம் இருந்தது. மதுரைக்காஞ்சியில் குரவை ஆட்டம் பற்றியும் அரசன் பிறந்தநாள் கொண்டாடப்பட்டமை பற்றியும் குறிப்பு உள்ளது"10** மதுரை நகரில் விழாக்காலத்தே, திங்கள் தோன்றி இரவு வந்த பின்னர் எழுந்த பல்வேறு ஓசைகள் பற்றிக் குறிப்பிடும் மதுரைக்காஞ்சி, வெறியாடும் வேலன் முருகக் கடவுளை வழிபட்டு நிற்கும்போது மன்றம் தோறும் குரவைக் கூத்து நிகழும் என்று கூறுகிறது.

**முடிவுரை**

கலை என்பது மன உணர்வின் வெளிப்பாடு. மனிதனது வெளிப்பாட்டு இயலுமைக்குத் தக்கனவாக நாவல், கதை, சிறுகதை, கட்டுரை, கவிதை என பல்வேறு வடிவங்களுக்குள் இலக்கியம் எனும் மொழிசார் கலையும் நுண்கலை, பயன்கலை, கவின்கலை, நிகழ்த்துகலைகள் என மொழிசாரா கலைகளும் தம் வடிவங்களில் வேறுபட்டிருப்பினும் தமது உள்ளடக்கங்களில் ஏதோ ஒரு புள்ளியைப் பற்றியே குவிந்திருப்பது வெளிப்படையானது. மனிதனது இயங்கியலும் அதனுடன் தொடர்புடைய அவனது வாழ்வியலுமே படைப்புக்களை தீர்மானிக்கின்ற காரணிகளாகின்றன. மனிதனுடைய இயங்கியலை அவனது நடத்தைக் கோலங்களை அழகியல் மொழியில் எழுதிய படைப்புகள் இன்று மனிதனது அழகியலை மட்டுமல்லாது அவனது வாழ்வியலை தீர்மானிக்கக்கூடிய திறனாக உருவெடுத்துள்ளது என்பது தெளிவாகிறது.

**மேற்கோள்கள்**

1) தொல்காப்பியம், நூற்பா எண். 1268
2) தொல்காப்பியம், நூற்பா எண். 793
3) தொல்காப்பியம், நூற்பா எண். 33
4) தொல்காப்பியம், அகத்திணையியல், நூற்பா எண். 18
5) புறநானூறு, பாடல் எண். 289.
6) ஐங்குறுநூறு, பாடல் எண். 234
7) ஐங்குறுநூறு, பாடல் எண். 142
8) பதிற்றுப்பத்து, பாடல் எண். 56

9) மலைபடுகடாம், பாடல் வரி. 320-322

10) மதுரைக்காஞ்சி, பாடல் வரி. 614-619.

**துணைநூற்பட்டியல்**


1. தொல்காப்பியம் - இளம்பூரனர் உரை
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி.லிட்)
41-பி சிட்கோ இண்டஸ்டிரியல்
எஸ்டேட்
அம்பத்தூர்
சென்னை - 600050.

2. புறநானூறு - உ.வே.சாமிநாத ஐயர் உரை
பாரி நிலையம்
90, பிராட்வே
சென்னை - 600108.

3. ஐங்குறுநூறு - அ.ச.ஞானசம்பந்தன் உரை
பாவை பப்ளிக்கேஷன்ஸ்
ஜானிஜான் கான் சாலை
இராயப்பேட்டை
சென்னை - 600014.

4. பதிற்றுப்பத்து - ச.வே.சுப்பிரமணியன் உரை
கழக வெளியீடு
பாரி நிலையம்
சென்னை - 6000018

5. மலைபடுகடாம் - ச.வே.சுப்பிரமணியன் உரை
கழக வெளியீடு
பாரி நிலையம்
சென்னை - 6000018

6. மதுரைக்காஞ்சி - ச.வே.சுப்பிரமணியன் உரை
கழக வெளியீடு
பாரி நிலையம்
சென்னை - 6000018